1973 நவம்பர் 26]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது மற்ற மாநிலங்களோடு பேசி முடிவடைய வேண்டிய காரியமாக இருக்கிறது. இப்பொழுது மாநிலங்களுக்கு இடையே நடைபெறுகிற பேச்சுவார்த்தைகளின் வெற்றியைப் பொருத்து இந்தத் திட்டம் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: ஒதுக்கப்பட்ட தொகையில் மின்சார அபிவிருத்திக்கு—தொழில் அபிவிருத்திக்கும் விவசாய அபிவிருத்திக்கும் மின்சாரம் மிகவும் தேவையாக இருக்கிறது—ஒதுக்கப்பட்ட பணம் 6-ல் ஒரு பங்கு தான். இது போதுமா? இதை அதிகப்படுத்துவதற்கு குறைந்தது மூன்றில் ஒரு பங்காக அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் ஏதேனும் வழி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது நாம் ஒதுக்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிற திட்டங்கள் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுவிட்டாலே நமக்கு இருக்கிற மின்சார பற்றாக்குறையைப் போக்குவதற்கு வழிவகைகள் காண முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 391, 392, 393, 394 எண்ணுள்ள கேள்விகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகின்றன.

Building Materials Finance Corporation.

* 395 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to set-up a Building Materials Finance Corporation in the State; and

(*b*) whether any request has been made to the Central Government by the State Government in this regard?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை.

திரு. என். டென்னிஸ்: இவ்விதமாக ஒரு கழகம் அமைக்கப்பட்டால் நிதி உதவி அளிப்பதற்கும், காட்டேஜ் இண்டஸ்ட்ரீஸை வளர்ப்பதற்கும், வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக இருக்குமாகையால், அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய ஒரு திட்டத்தைச் சொல்கிறார்கள். இப்படி வேறு மாநிலங்களில் இருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி இருக்கிறோம். தகவல் கிடைத்த பிறகு அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

திரு. த. சோனையா : தமிழகத்தில் பொதுப்பணித் துறையில் அதிகமாக நிறைய கட்டடங்கள் கட்டுவதற்கு பெரிய தொகை போட்டு செலவிடப்படுகிறது. அதனால் அதற்கென்று ஒரு தனி வாரியம் ஏற்படுத்தினால் காரியங்கள் சுமுகமாக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதைச் செய்வதற்கு அரசு ஏதாவது குறிப்பு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கேள்வி கட்டடம் கட்டுகிற பொருள்களுக்கான வாரியம் பற்றியது. அங்கத்தினர் குறிப்பிடுவது கட்டடம் கட்டுவதற்கான வாரியம். இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

புதுப்பட்டிக்கு பாசனக் கண்மாய்

*396 வினா—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், விளாத்திகுளம் ஒன்றியத்தைச் சேர்ந்த டி. புதுப்பட்டியில் ஓர் பாசனக் கண்மாய் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இத் திட்டத்திற்கான ரூ. 7.33 லட்சங்கள் மதிப்பீடு பாசனத் தலைமைப்பொறியாளரால் உணவு உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலமாக அரசுக்கு அனுப்பப்பட்டு வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(இ) வருவாய் வாரியத்தின் பரிந்துரை கிடைத்த பிறகு மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்த பிறகுதான் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்